# தகவல் பெறும் உரிமைச்சட்ட விண்ணப்பம்

(ஏற்புச் சான்றுடன் கூடிய பதிவு தபால் Register Post With Acknowledgement)

சேவூர்

16-05-2016

அனுப்புனர்:

சு.சிவப்பிரகாஷ்
S/o.சுப்பையகவுண்டர்,
61, சிந்தாமணிப்பாளையம்
பாப்பாங்குளம் (ப), சேவூர் (அ),
அவினாசி (வ), திருப்பூர் (மா) – 641655

பெறுநர்:

பொது தகவல் அலுவலர்,
பாரத ஸ்டேட் வங்கி,
கோயம்புத்தூர் தலைமை கிளை (Coimbatore Main Branch),
கோயம்புத்தூர் – 638 504

பொருள்: தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-யின் கீழ் தகவல் வேண்டி மனு. திருப்பூர் மாவட்டம் செங்கப்பள்ளி அருகே தேர்தல் சோதனை குழுவிடம் பிடிபட்ட 570 கோடி தொடர்பாக.

ஐயா:

1. திருப்பூர் மாவட்டம் செங்கப்பள்ளி அருகே 570 கோடி பணம் தேர்தல் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டதாகவும், அவ்வாறு பிடிபட்ட பணம் பாரத ஸ்டேட் வங்கியினுடையது என்று கடந்த இருதினங்களாக ஊடங்களில் செய்தி வந்துகொண்டிருக்கிறது. ஊடாகங்கள் கூறுவது போல வங்கியின் பணம் பிடிபட்டது உண்மையா என்று கூறவும்.

2. அவ்வாறு வங்கியின் பணம் பிடிபட்டது என்றால் அந்த பணம் எதற்காக, எங்கு பரிவர்த்தை மற்றும் பரிமாற்றம் செய்தீர்கள் என்று கூறவும்.

3. செங்கப்பள்ளி அருகே தேர்தல் பறக்கும் படையிடம் பிடிபட்ட பணத்தினை பரிவர்த்தனை செய்வதற்கு மத்திய ரிசர்வ் வங்கி வழங்கிய அனுமதி ஆவணங்களின் நகல்களை அனுப்பவும்.

4. செங்கப்பள்ளி அருகே தேர்தல் பறக்கும் படையிடம் பிடிபட்ட பண பரிவர்த்தனைக்கு உங்கள் வங்கியின் உயர் அலுவலர்களால் வழங்கப்பட்ட அனுமதி ஆவணங்களின் நகலை அனுப்பவும்.

5. செங்கப்பள்ளி அருகே தேர்தல் பறக்கும் படையிடம் பிடிபட்ட பணத்தின் பரிவர்த்தனை தேர்தல் நேரத்தில் செய்யவேண்டிய அவசரம் மற்றும் அவசியம் என்ன என்பது பற்றி கூறவும்

www.Padasalai.Net
பாடசாலை

P.T.O

6. தேர்தல் நேரத்தில் பல இடங்களில் பண பறிமுதல்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பது தெரிந்தும் செங்கப்பள்ளி அருகே தேர்தல் பறக்கும் படையிடம் பிடிபட்ட பண பரிவர்த்தனைக்கு முன்கூட்டியே தேர்தல் ஆணையத்திடம் அனுமதி வாங்காமல் இருந்துதது ஏன் என்று கூறவும். (வெறும் ஆவணங்களுடன் செல்ல இது ஒன்றும் சிறு தொகை அல்லவே)

7. செங்கப்பள்ளி அருகே தேர்தல் பறக்கும் படையிடம் பிடிபட்ட பணத்தினை எங்கு வைத்து வாகனங்களில் நிரப்பப்பட்டது (லோடு செய்யப்பட்டது). அதாவது 570 கோடியும் எந்த எந்த வங்கி கிளைகளில் இருந்து வாகனங்களில் நிரப்பட்டது என்று விளக்கமாக கூறவும்.

8. செங்கப்பள்ளி அருகே தேர்தல் பறக்கும் படையிடம் பிடிபட்ட பணத்தினை வாகனங்களில் நிரப்பப்படும் போது வங்கி கிளைகளின் கண்காணிப்பு கேமராவில் பதிவாகியிருக்கும் வீடியோவின் சீ.டி காப்பியை வழங்கவும். (முழுப்பணமும் நிரப்பட்டதற்கான வீடியோ)

9. மேற்கோரிய நகல்கள் மற்றும் வீடியோ சீ.டி-க்கான கட்டணத்தை எவ்வாறு என்ன பெயரில் செலுத்த வேண்டும் என்று விளக்கமாக கூறவும்.

மேற்கண்ட கேள்விகளுக்கு பதிலை **முப்பது** நாட்களுக்குள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். விண்ணப்பத்திற்கான கட்டணத்தை பத்து ரூபாய் கோர்ட் ஸ்டாம்ப் பீ (FEE) மூலம் செலுத்தியுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள

16/05/16

சு.சிவப்பிரகாஷ்

நகல்:

1. பொது தகவல் அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி தலைமை அலுவலகம், சென்னை.

2. உயர்திரு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி, தமிழக தேர்தல் ஆணைய அலுவலகம், சென்னை.

3. உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள், திருப்பூர் மாவட்டம்.

4. உயர்திரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள், திருப்பூர் மாவட்டம்.

www.Padasalai.Net
பாடசாலை